1974 மார்ச் 9]

அவர்களே அதிகாரிகள் பிடித்துவிடுகிருர்கள். காஞ்சிபுரத்திற்கு வெளியே வந்தால் பிடித்துவிடலாம் என்கின்ற அளவுக்கு அதற்கான ஒரு திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எந்த முறையில் கட்டுப்படுத்தவேண்டுமோ அந்த முறையில் சட்டம் போட்டிருக் கிருேம். கடத்தலைத் தடுப்பதற்குப் போடப்பட்ட சட்டத்திற்கு உட்பட்டுத் தான் வழக்குகள் தொடரப்படுகின்றன. சட்டத்திற்கு உட்படாமல் எதுவும் செய்யப்படவில்லை. உள்ளே வருகிறதா, வெளியே கொண்டு போகிருர்களா, கணக்கு எழுதி வைத்திருக் கிருர்களா என்பதையெல்லாம் ஆய்வு செய்து தான், ஏதாவது தவறு நடந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால் இப்படிப்பட்ட வழக்குகள் போடப்படுகின்றன.

**திரு. கே. என். குமாரசாமி:** வியாபாரிகளிடத்திலிருந்து கணக்கில் வராத நெல்லைப் பிடித்து இப்பொழுது கேஸ் போடப் பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். அரசாங்க ஏஜெண்ட் மூலம் வசூல் பண்ணுகிற நெல்லை கோடவுனில் ஸ்டாக் வைத்து, சீல் வைத்து, அந்த நெல் மூட்டைகள் காணமல் போய்விடுகின்றன. அது பிறகு ஒரு வருஷம் கழித்து கண்டுபிடிக்கப்படுகிறது. இந்த நிலைமையை எப்படி அரசாங்கம் சரிக்கட்டப்போகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இந்த முறை களெல்லாம் இப்பொழுது மாற்றி அமைக்கப்பட்டுவிட்டன என்று நான் முன்பே சொன்னேன். 100, 200 இடங்களில் இருக்கும் பொழுது ஏதோ ஒன்று, இரண்டு இடங்களில் தவறு ஏற்படுகிறது. அம்மாதிரி தவறு எங்கும் இப்பொழுது நடைபெறுவதில்லை. தவறு இப்பொழுது ஒன்று, இரண்டு இடத்தில் தான் நடக்கிறது. அதுவும் இனிமேல் நிச்சயம் இருக்காது.

*Price review of agricultural produces*

* 347 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government have undertaken any periodical price review of agricultural produces in this State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) புள்ளி விவரத் துறை இயக்குநர், வேளாண்மைப் பொருட்களின் விலைகளில் காணப்படும் ஏற்ற இறக்கங்கள் குறித்து ஒவ்வொரு வாரமும் ஆய்வு செய்கிறார். இன்றியமையா உணவு தானியங்கள், வாணிபப் பொருட்கள் ஆகியவற்றின் அந்த வாரத்திய விலைகள் இந்த ஆய்வில் அடங்கியிருக்கும். கடந்த ஆண்டு விலையுடனும், 1953-55 ஆம் ஆண்டுகளின் சராசரி விலையுடனும் ஒப்பிட்டுப் பார்க்கையில், அந்த வாரத்திய விலைகள் கூடியுள்ளனவா குறைந்துள்ளனவா என்றும் அதில் குறிப்பிடப் பட்டிருக்கும். முந்திய அரை மதியத்திலும், கடந்த ஆண்டின் அதற்கு நிகரான அரை மதியத்திலும் நிலவிய விலைவாசி நிலவரத்துடன் ஒப்பிட்டுப் பார்த்து, ஒவ்வொரு அரை மதியத்திலும் (Fortnightly) நெல், அரிசி விலைகள், நெல், அரிசி வரவுகள், செலவுகள் ஆகியவற்றின் அடிப்படையில், நெல், அரிசி விலைவாசி குறித்து அறிக்கை ஒன்றும் தயாரிக்கப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்தப் புள்ளி விவரங்களை சேகரிக்கின்ற நேரத்தில் மத்திய சர்க்காரின் தவறான பொருளாதாரக் கொள்கையினால் மூன்று மாத காலத்தில் 25 புள்ளிகள் ஏறி இருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதை இந்த இலாகா பரிசீலனை செய்திருக்கிறதா? அப்படியானால் அதன் மீது நடவடிக்கை எடுக்க நமது அரசு மத்திய அரசுக்கு ஏதாவது கடிதம் எழுதுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** நம்முடைய மாநிலத்தில் உள்ள நிலைமைகளை ஆங்காங்கு பார்த்து, இந்த விலை விவரங்கள் சேகரிக்கப்படுகின்றனவே தவிர, மத்திய சர்க்கார் புள்ளி விவரங்களோடு இதைச் சம்பந்தப்படுத்தி ஆய்வு செய்கிறார்களா என்ற குறிப்பு தற்பொழுது என்னிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** வேளாண்மைப் பொருள்களின் விலையைக் குறித்த ஆய்விலே வேளாண்மைப் பொருள்களை விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற நேரத்திலே விலை குறைந்தும், அவர்கள் அதை விற்றவுடன் ஏறுமுகமாகவும் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, விலை திடீரென்று இறங்குவதும், ஏறுவதுமாக இருக்கும் முறையை மாற்றி, உற்பத்தி விலையே தொடர்ந்து இருக்கக்கூடிய அளவிற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசாங்கம் யோசிக்குமா?

1974 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்த இலாகாவைப் பொறுத்த வரையில் இது நாட்டிலிருக்கிற புள்ளிவிவரங்களை சேகரிக்கும் இலாகாவே தவிர, விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய நிலைமையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, may I know from the Hon. Minister the percentage of increase as compared to the last year?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மொத்தத்தில் சென்ற ஆண்டைவிட என்று சொல்வதற்கில்லை, வாரா வாரம் ஏறுகிறது. பிப்ரவரி 15-ம் தேதி பொதுவாக நிலைமையை ஆய்ந்து பார்த்ததில் நெல் விலை 5 புள்ளிகள் குறைந்து இருப்பதாக ஒரு குறிப்பு என்னிடத்தில் தரப்பட்டிருக்கிறது.

*Labourers in rubber plantations*

* 348 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Plantation Labour Advisory Committee has made any representation to the effect that the Labour Laws remain un-implemented in the Rubber Plantations in the Kanyakumari district; and

(*b*) if so, the steps taken by the Government to set right the matter?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம். கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள் அளிக்கப்படவில்லை என்று, மலைத் தோட்டத் தொழிலாளர் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தொழிலாளர் பிரதிநிதிகள் முறையிட்டுள்ளனர்.

(இ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 25 ரப்பர் தோட்டங்களில் 15 தோட்டங்கள் தங்களது மருத்துவத் திட்டங்களுக்கு அரசின் ஏற்பளிப்பை முன்னரே பெற்றுள்ளன. மருத்துவத் திட்டங்களுக்கு அரசின் ஏற்பைப் பெறத் தவறிய நிர்வாகிகள் மீது தண்டனைக்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தண்டனைக்குரிய நடவடிக்கை எடுப்பதில் நடைமுறைகள் பல பின்பற்றப்படவேண்டியிருப்பதால் முடிவு தெரிவதற்குச் சில காலமாகும்.